## உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியம் - 2013

உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் (நிதியம்) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று மற்றும் நிறுத்திவைத்த இலாபங்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து உள்ளுர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கப்பாடு (எல்கேஏஎஸ்/எஸ்எல் எவ்ஆர்எஸ்)**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எல்கேஏஎஸ் 01 – நிதிக்கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல்**

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒப்பீட்டு ரீதியான புள்ளிவிபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) வரிவிதிப்பு மற்று கடன் மற்றும் பெறவேண்டியவர்களுடன் தொடர்புடைய முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் வெளிப்படுத்தப்பட்டிருக்காததுடன் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்கீட்டு கொள்கையுடன் தொடர்புடைய தேவையான தகவல்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிதிக்கூற்றுக்கள் மீள குறிப்பிடப்பட்ட போதிலும், அது முறையாக முன்னிலைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) நிதிக்கூற்றுக்கான குறிப்புக்களில் உபபட்டியல் இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவை நிதிக்கூற்றுக்களில் பிரதிபலிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எல்கேஏஎஸ் 10 – அறிக்கையிடல் காலப்பகுதிக்கு பின்னரான நிகழ்வுகள்.**
நிதிக்கூற்றுக்களை அங்கீகரித்த திகதியை கம்பனி வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**(இ) எல்கேஏஎஸ் 12 – வருமான வரிகள்**
பின்போடப்பட்ட வரி சொத்து/பொறுப்பு நிதிக்கூற்றுக்களில் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) எல்கேஏஎஸ் 9 – ஊழிய நலன்கள்**
ஊழியர்களின் நலன்கள் தொடர்பில் நடைமுறை சேவைக் கிரயம், மீள் மதிப்பிடப்பட்ட தேறிய விபரிக்கப்பட்ட நலன்கள் பொறுப்பு மற்றும் கடந்தகால சேவைக் கிரயம் போன்ற விபரங்கள் முறையாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான ரூபா 14,994,954 ஆன நிலையான வைப்புக்களின் மீதான வட்டி வருமானத்தினை நிதியம் இனங்கண்டிருக்கவில்லை. ஆகையினால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான முதலீட்டின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டிற்கான இலாபம் அந்த தொகையால் குறைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பிழையான கணிப்பிட்டின் காரணமாக ரூபா 209,499,354 இற்குப் பதிலாக நட்டக்கழிவொன்றாக நிதிக்கூற்றுக்களுக்கு ரூபா 250,162,653 தொகையொன்று வரவு வைக்கப்பட்டிருந்தது. ஆகையினால் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் இலாபம் ரூபா 40,663,239 இனால் குறைத்துக்குறிப்பிடப்பட்டிருந்தது.

(இ) பிழையான கணிப்பிட்டின் விளைவொன்றாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பெறவேண்டிய வட்டித் தொங்கல் கணக்கு மற்றும் வட்டித் தொங்கல் கணக்கு ரூபா 242,627 இனால் மிகைத்து குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூர் அதிகாரசபைகளுக்கு வழங்கப்பட்ட வருமான இனங்காணல், கடன்களின் மீதிகள் மற்றும் கடன்களின் மீதான பெற வேண்டிய வட்டியில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் கீழே தரப்படுகின்றன.

(i) நிதிக்கூற்றுக்களில் ஆரம்ப கடன்களாக ரூபா 96,366,315 தொகையொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், அந்தக் கடன்கள் 2012 சனவரி 01 இல் ரூபா 82,500,000 ஆக மிள்பட்டியல்படுத்தப்பட்டிருந்ததன் விளைவாக நிதியத்திற்கு ரூபா 13,866,315 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தொடர்புடைய கடன் கணக்கில் இது சரிப்படுத்தப்பட்டிருக்காமையால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன் மீதி ரூபா 13,866,315 இனால் மிகைத்து குறிப்பிடப்பட்டிருந்தது.

(ii) திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாது 2012 சனவரி 01 இலிருந்து அமுலுக்குவரும் வகையில் ரூபா 13,866,315 இனால் பொதுத்திறைசேரிக்கு செலுத்தவேண்டிய கடனை நிதியம் குறைந்தமையினால், ஆரம்ப கடன்கள் மீது திறைசேரிக்கு வட்டி செலுத்தவேண்டியிந்தமையினால், 2012 மற்றும் 2013 காலப்பகுதியின் போது வட்டியாக ரூபா 1,455,963 இனை நிதியம் மிகையாக செலுத்தியிருந்தது.

(உ) அறவிடமுடியாக்கடனுக்கான ஏற்பாட்டிற்கு மாத்திரமின்றி நட்டக்கழிவிற்கான ஏற்பாட்டிற்குக் கூட கழித்தமை காரணமாக 2013 திசெமபர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் ரூபா 23,262,497 இனால் குறைத்துகாட்டபட்டிருந்தது.

(ஊ) உள்ளூராட்சி உட்கட்டுமான அபிவிருத்திச் செயற்திட்டத்தின் (எல்ஜீஜஜபி) கடன்பட்டியலின் பிரகாரம், ஆண்டிற்கான வட்டி வருமானம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான பெறவேண்டிய வட்டி முறையே ரூபா 167,146,395 மற்றும் ரூபா 93,305,400 ஆகக் காட்டப்பட்டது. எவ்வாறாயினும், அது முறையே ரூபா 147,407,845 மற்றும் ரூபா 74,931,381 ஆக நிதிக்கூற்றுக்களில் காணப்பட்டது. ஆகையினால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான வட்டி வருமானம் மற்றும் பெறவேண்டிய வட்டி ரூபா 19,738,550 மற்றும் ரூபா 18,374,019 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(எ) தொடர்புடைய கணக்குகளுக்கு மாற்றஞ்செய்யாது ஒரு வருடத்திற்கு மேலாக முற்பணக் கணக்கில் ரூபா 510,000 எல்எல்டீஎவ் கடன் தவணைகள் தொடர்ந்து காணப்பட்டது. ஆகையினால், 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட கடன் மீதிகள் சமமான தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) கடன் பட்டியலின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக நிதியத்தினால் வழங்கப்பட்ட கடன்கள் மீதான வட்டி வருமானம் ரூபா 52,956,299 ஆகக் காணப்பட்டது. எவ்வாறாயினும், வட்டி வருமானமாக நிதிக்கூற்றுகளில் ரூபா 51,154,999 தொகையொன்று மாத்திரம் காட்டப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டிற்கான் வட்டி வருமானம் ரூபா 1,801,300 இனால் குறைத்து குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும், ரூபா 8,364,306 பெறுமதியான கடனென்றிற்கான வட்டி கணிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் கணக்குகளிற்கும் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஐ) நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு திட்டத்தின் (யூடீஎல்ஐஎச்பி) கடன் பேரேடு மற்றும் வட்டிக் கணிப்பீடுகளின் பிரகாரம் ஆண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 126,512,986 ஆகக் காணப்பட வேண்டிய போதிலும், வருமானமாக ரூபா 92,909,677 தொகையொன்று மாத்திரமே கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருந்தது. ஆகையினால், மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் ரூபா 33,603,309 இனால் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ஒ) யூடீஎல்ஐஎச்பி உடன் தொடர்புடைய 2012 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான வட்டி வருமானம் முறையே ரூபா 1,216,741 மற்றும் ரூபா 1,306,001 தொகையானவை 2013 ஆம் ஆண்டிற்கான வருமானமொன்றாக பிழையாக எடுக்கப்பட்டிருந்தது. ஆகையினால், நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 2,522,742 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது, மேலும், 2012 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய நகர சபையொன்றிக்கு வழங்கப்பட்ட கடனொன்றின் மீதான ரூபா 946,810 வட்டி வருமானமொன்று 2013 ஆம் ஆண்டிற்கான வருமானமாக கருத்திற் கொள்ளப்பட்டிருந்தது. ஆகையினால், வட்டி வருமானம் சமமான தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஓ) நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம், அலுவலக தளபாடத்தின் மீதான பெறுமானத்தேய்வு ஆண்டிற்கு 5 சதவீத விகிதமொன்றில் கணிப்பிடப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2008 ஆம் ஆண்டில் ரூபா 454,020 ஆன கிரயமொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட அலுவலக தளபாடத்திற்கான பெறுமானத்தேய்வு ஆண்டிற்கு 20 சதவீத விகிதமொன்றில் கணிப்பிடப்பட்டிருந்தது. ஆகையினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான திரண்ட பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு முறையே ரூபா 317,814 மற்றும் ரூபா 41,618 இனால் மிகையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஔ) கடன் கணக்கில் மானிய மீதியின் பிழையான இனம்காணல் காரணமாக உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்துடன் தொடர்புடைய 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன் மீதி ரூபா 4,068,968 இனால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.3 இனக்கஞ்செய்யப்படாத வித்தியாசங்கள்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் தொடர்புடைய பதிவுகளில் காட்டபட்ட மீதிகளுக்கிடையே 09 கணக்குகள் தொடர்பாக ரூபா 41,860,918 கூட்டுத்தொகையான இணஞ்செய்யப்படாத வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.4 இணங்காணப்படாத வித்தியாசங்கள்

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டிய வட்டி மீதிகளுக்கும் மற்றும் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட பட்டியல்களில் காட்டப்பட்ட தொடர்புடைய மீதிகளுக்குமிடையே ரூபா 16,921,025 கூட்டுத்தொகையான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டதுடன் இந்த வித்தியாசங்களுக்கான காரணங்கள் கணக்காய்விற்கு விபரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காணாமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடான தொடர்பு | இணங்காணாமை |
|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 754 | மீளவாண்டின் போது முறையே ரூபா 300,157 ரூபா 90,180 மற்றும் ரூபா 35,270 பெறுமதியான எழுதுகருவிகள் 24 அலுவலக பைகள் மற்றும் 40 கணிப்பான்களை நிதியம் கொள்வனவு செய்திருந்த போதிலும், இருப்புக்களின் நகர்வுகள் முறையாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் 2013 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு சபை நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நிதியத்தினால் பின்பற்றப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டம் | நிதியத்திற்கான அனைத்து நியமனங்களும் நிதியத்தின் ஆட்சேர்ப்புத் திட்டங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்படல் வேண்டும். அதற்கு முரணாக, 2012 ஆம் ஆண்டில் பதவிக்கு தேவையான அடிப்படைக் கல்வித் தகைமைகளினைக் கொண்டிராத உத்தியோத்தர் பிரதிப் பணிப்பாளராக (செயற்பாடு) நியமிக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதி வரை அப்பதவியின் கடமைகளினை அந்த உத்தியோகத்தர் மேற்கொண்டிருந்தார். |
| (இ) | 2002 நவம்பர் 28 இன் ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிகள், கணனி உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்களுக்கான பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகளிலிருந்தான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வரிக்கு முன்னரான தேறிய நட்டம் ரூபா 335,404,859 உடன் ஒப்பிடும் போது ரூபா 246,455,922 ஐ விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டின் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 88,948,937 ஆன முன்னேற்றத்தினைச் சுட்டிக்காட்டுகின்றது. ரூபா 14,991,233 இனால் வழங்கப்பட்ட கடன்களின் மீதான வட்டி வருமானத்தின் அதிகரிப்பு மற்றும் ரூபா 146,210,891 இனால் கடன்களுக்கான நட்டக்கழிவின் குறைவு என்பன இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணங்களாக தாக்கமளித்திருந்தன.

ரூபா 14,351,144 கூட்டுத்தொகையான பெறுமானத்தேய்வு, வரிச் செலவினங்கள் மற்றும் தனிநபர் ஊதியம் என்பவற்றை கணக்கிற்கு எடுத்த பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் பெறுமதி சேர்கை ரூபா 233,904,778 ஆன எதிர்மறைப் பெறுமதியாக காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 முக்கிய கணக்கீட்டு விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான நிதியத்தின் சில முக்கிய கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| விகிதங்கள் | 2013 | 2012 |
|---|---|---|
| மொத்த வருமானத்திற்கு தேறிய நட்டம் (சதவீதம்) | 73.75 | 102.77 |
| நடைமுறைச் சொத்து விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 16.7:1 | 119:1 |
| செயற்பாட்டு செலவினங்களுக்கான பதவியணியினர் கிரயம் (சதவீதம்) | 4.8 | 4.5 |

(அ) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டிலிருந்து நிதியம் நட்டங்களினை அறிக்கையிட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 ஆம் ஆண்டில் ரூபா 89,248,937 இனால் தேறிய நட்டம் குறைவடைந்ததன் காரணமாக தேறிய நட்ட விகிதம் 2012 ஆம் ஆண்டில் 102.77 சதவீதத்திலிருந்து 2013 ஆம் ஆண்டில் 73.75 சதவீதத்திற்கு குறைவடைந்திருந்தது.

(ஆ) நடைமுறைச் சொத்துக்களின் கீழ் கடன் மற்றும் பெறவேண்டியவைகளின் இணங்காணல் மற்றும் சேமிப்புக் கணக்குகளில் கருத்திற் கொள்ளக்கூடிய அளவுக்கு வைப்புக்கள் பராமரிக்கப்பட்டமையின் பிரதான காரணமாக, உயர் நடைமுறைச் சொத்து விகிதமொன்றினை நிதியம் அறிக்கையிட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 1993 இன் 24 ஆம் இலக்க உள்ளூர் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதிய (திருத்தியமைக்கப்பட்ட) அதிகாரச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் பிரகாரம், தொழிநுட்ப உதவி உள்ளடங்களாக ஏதாவது பொதுப் பயன்பாட்டு வேலைக்கு நிதியத்தினால் எந்த நோக்கத்திற்கும் கடன்கள் வழங்கமுடியும். அதற்கமைய, ஐந்து செயற்திட்டத்தின் கீழ் நிதியம் கடன்களினை வழங்கியிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான மற்றும் முன்னைய ஆண்டின் வருமதியாகவுள்ள மீதிகள் பின்வருமாறு.

| **செயற்திட்டங்களின் பெயர்** | **திசெம்பர் 31 இல் உள்ளபடியான வருமதியாகவுள்ள கடன் மீதிகள்** | |
|---|---|---|
| | **2013** | **2012** |
| | **ரூபா.** | **ரூபா.** |
| உள்ளூர் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியம் (எல்எல்&டீஎவ்) | 619,124,948 | 517,621,456 |
| நகர அபிவிருத்தி மற்றும் குறைந்த வருமான வீடமைப்பு திட்டம் (யூடீஎல்ஐஎச்பி) | 1,706,194,130 | 1,788,745,619 |
| உள்ளூராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்றம் செயற்திட்டம் (எல்ஜீஐஐபி) | 1,735,734,362 | 1,729,974,677 |
| தனிநபர் பயிரிடல் அபிவிருத்தி செயற்திட்டம் (பிசீடீபி) | 69,356,658 | 70,733,648 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கான செயற்திட்டங்கள் (என்டபிள்யூஎஸ்&டீபீ) | 9,215,880 | 9,995,449 |
| **மொத்தம்** | **4,139,625,978** | **4,117,070,849** |

கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், யூடீஎல்ஐஎச்பி மற்றும் எல்ஜீஐஐபி இன் கீழ்க் காணப்படும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கு முறையே 83 சதவீதம் மற்றும் 85 சதவீதத்திற்கும் அதிகமான நிதிசார் வசதிகள் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டங்களிலிருந்து கடன்களினை வழங்குவதற்கு நிதியம் இலக்குகளினை தாபித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது பல்வேறு செயற்பாடுகளுக்கு கடன்களினை வழங்குவதற்கு ரூபா 300 மில்லியன் தொகையொன்று ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் மீளாய்வாண்டின் போது கடன்களாக ரூபா 225.47 மில்லியன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்தது. இந்தக் கடனின் செயல் முன்னேற்றம் பொழிப்பாக்கப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| செயற்பாட்டின் பெயர் | ஒதுக்கப்பட்ட நிதி | | மிளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்ட நிதிகள் | | ஒதுக்கீட்டின் சதவீதமாக நிதியின் பயன்பாடு |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | தொகை<br>ரூபா. மில்லியன் | செயற்திட்டங்களின் எண்ணிக்கை | தொகை<br>ரூபா. மில்லியன் | |
| இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | 15 | 75 | 25 | 197.86 | 264 |
| அலுவலக கட்டிடம், வாசிகசாலைகள் மற்றும் ஞாபகார்த்த மண்டபங்களின் நிர்மாணம் | 3 | 25 | - | - | - |
| சுடுகாட்டின் நிர்மாணம் | 4 | 25 | 1 | 1.97 | 8 |
| வாராந்த சந்தைகள் மற்றும் பொருளாதார நிலையங்களின் நிர்மாணம் | 6 | 30 | 4 | 10.65 | 36 |
| சந்தைக் கட்டிடங்களின் நிர்மாணம் | 4 | 50 | 3 | 14.99 | 30 |
| சுற்றுச்சுழல் மற்றும் சுற்றுலா செயற்திட்டங்கள் | - | 10 | - | - | - |
| வீதிகளின் அபிவிருத்தி | - | 20 | - | - | - |
| கழிவு முகாமைத்துவ செயற்திட்டங்கள் | 2 | 25 | - | - | - |
| நீர் செயற்திட்டங்கள் | 2 | 15 | - | - | - |
| ஏனைய வருமானம் உழைக்கும் செயற்திட்டங்கள் | 8 | 25 | - | - | - |
| **மொத்தம்** | **44** | **300** | **33** | **225.47** | **75** |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) கழிவு முகாமைத்துவம் உள்ளடங்களாக ஐந்து செயற்பாடுகளுக்கு ரூபா 120 மில்லியன் தொகையொன்றினை நிதியம் ஒதுக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையேனும் அந்த செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய செயற்பாடுகளில், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகளினைத் தவிர ஆண்டின் இறுதியில் உள்ளபடியான செயலாற்றல் 40 சதவீத்தினை விடகுறைந்தாக தேற்றமழித்தன. இந்த நோக்கத்திற்கு ரூபா 75 மில்லியன் மாத்திரம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுக்கு ரூபா 197.86 மில்லியன் நிதி செலவழிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 225 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ஏனைய செயற்பாடுகள் உள்ளூர் அதிகாரசபையின் முக்கியமான செயற்பாடுகளாக காணப்பட்டன.

## 4.2 விளைவற்ற சொத்துக்கள்

கடன்களின் கொப்பணவு மற்றும் அறவிடுகை நோக்கத்திற்கு உள்ளுராட்சி உட்கட்டமைப்பு முன்னேற்ற செயற்திட்டத்தின் கீழ் 2009 இல் உள்ளுர் பரப்பு வலைப்பின்னலின் (மென்பொருள்) நிறுவுகைக்கு மற்றும் கொள்வனவுக்கு ரூபா 1,302,214 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறுவிய திகதியிலிருந்து இந்தச் சொத்து தொடர்ந்தும் விளைவற்றுக் காணப்பட்டிருந்தது.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

ரூபா 235,200 கிரயமொன்றில் கடன் முகாமைத்துவ முறைமைகள் மற்றும் நிதிகள் கணக்கீட்டிற்கு 2009 ஆம் ஆண்டில் மென்பொருள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது நிதியத்தின் தேவைக்கு மொத்தமாகக் காணப்படாமையினால் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 இலிருந்து 2013 திசெம்பர் 31 வரை நிதியத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக (சீஈஓ) காலத்திற்கு காலம் ஐந்து உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். மேலும், தற்போதைய சீஈஓ கூட ஒரு வருட காலப்பகுதியொன்றிற்கு மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். ஆகையினால், அவ்வாறான முக்கிய பதிவுகளின் தொடர்ச்சியான மாற்றம் நிதியத்தின் சுமுகமான செயற்பாட்டினை பாதிக்கக்கூடும்.

(ii) 2014 ஆம் ஆண்டின் போது சபை ஆணையாளர்களினால் இரண்டு சந்தர்ப்பங்களில் நிதியத்தின் உதவிக்கணக்காளர், பிரதிப் பணிப்பாளராக (நிதி மற்றும் நிர்வாகம்) நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் இறுதி வரையேனும் நியமனத்தின் முறைசார் கடிதமொன்று அவருக்கு விநியோகிக்கப் பட்டிருக்கவில்லை. மேலும், 2015 திசெம்பர் 29 இல் நடாத்தப்பட்ட சபை ஆணையாளர்கள் கூட்டத்தில் 2015 ஆகஸ்ட் 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பிரதிப் பணிப்பாளராக (நிதி மற்றும் நிர்வாகம்) மற்றுமொரு நபரை நியமிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டது.

## 5. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு செயற்பாடுகளினை மேவுகை செய்வதற்கு வரிசை அமைச்சின் உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் போது ஒரு கணக்காய்வு ஐயவினா மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் அண்டின் இறுதி வரை நிதியத்தின் பாரிய இடர் பரப்புக்களினை மேவுகைசெய்வதற்கு நிரந்தர உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு போதியளவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது நிதியத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

| | கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | 2012 இல் வருமானக் கூற்றில் மேற்கொள்ளப்பட்ட பிழைகளுக்கான திருத்தங்களில் சில பதிவுகள் 2013 ஆம் ஆண்டிற்கு பிழையாக மீதி கீழ்க்கொண்டு செய்யப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தினால் பொதுப் பேரேடு முறையாகப் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | வருமதியாகவுள்ள கடன்கள் மற்றும் வட்டியின் அறவிடுகை | கடன்களின் அறவிடுகைக்கு முறையான திட்டமொன்றின் அமுல்படுத்தல் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய, நிதியத்தினால் வழங்கப்பட்ட அதிகமான கடன்கள் நிலுவையாக அறிக்கையிடப்பட்டிருந்தது. மேலும், நிதியத்தின் இலாபத்தன்மையினை கருத்திற்கொள்ளாது சில செயலற்ற கடன்கள் மீள்பட்டியல்படுத்தப்பட்டிருந்ததுடன் அவ்வாறான மீள்பட்டியல்படுத்தப்பட்ட கடன்களின் சரிப்படுத்துகைகளில் அதிகமானவை மீள்பட்டியல்படுத்தப்பட்ட தகவலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |